அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2018

# 14 - கத்தோலிக்க திருமறை

## புள்ளித்திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணாங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2018

## 14 - கத்தோலிக்கம்

## புள்ளிகளைப் பகிர்ந்தளிக்கும் முறை

**I வினாப்பத்திரம்**

பல்தேர்வு வினாக்கள் 01 - 40 = 01 x 40 = 40 புள்ளிகள்

**II வினாப்பத்திரம்**

**1ம் வினா ( கட்டாயமானது )**

01 – 10 = 02 x 10 = 20 புள்ளிகள்

**2 வினா (2 - 7 வரை தெரிவு செய்த வினாக்கள் 04)**

| | | | |
|---|---|---|---|
| I. | பகுதி புள்ளிகள் | 02 | |
| II. | பகுதி புள்ளிகள் | 03 | |
| III. | பகுதி புள்ளிகள் | 05 | = 10 புள்ளிகள் |

**3 வினா**

| | | | |
|---|---|---|---|
| I. | பகுதி புள்ளிகள் | 02 | |
| II. | பகுதி புள்ளிகள் | 03 | |
| III. | பகுதி புள்ளிகள் | 05 | = 10 புள்ளிகள் |

**4 வினா**

| | | | |
|---|---|---|---|
| I. | பகுதி புள்ளிகள் | 02 | |
| II. | பகுதி புள்ளிகள் | 03 | |
| III. | பகுதி புள்ளிகள் | 05 | = 10 புள்ளிகள் |

**5 வினா**

| | | | |
|---|---|---|---|
| I. | பகுதி புள்ளிகள் | 02 | |
| II. | பகுதி புள்ளிகள் | 03 | |
| III. | பகுதி புள்ளிகள் | 05 | = 10 புள்ளிகள் |

**6 வினா**

| | | | |
|---|---|---|---|
| I. | பகுதி புள்ளிகள் | 02 | |
| II. | பகுதி புள்ளிகள் | 03 | |
| III. | பகுதி புள்ளிகள் | 05 | = 10 புள்ளிகள் |

**7 வினா சிறு குறிப்பு இரண்டிற்கு**

05 + 05 = 10 புள்ளிகள்

**மொத்தம்** 04 x 10 = **40 புள்ளிகள்**

**இறுதிப்புள்ளி**

**(வினாப்பத்திரம் I = 40 புள்ளிகள் + வினாப்பத்திரம் II = 60 புள்ளிகள்) 100 புள்ளிகள்**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ $\frac{4}{5}$
........................................................................
........................................................................

(ii) ........................................................................ ✓ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(iii) ........................................................................ ✓ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம / மேலதிக பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II, III" எனும் நிரல்களில் உரிய நிரலில் பதிதல் வேண்டும்.

**சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் வினாப்பத்திரம் I, II, மற்றும் III என்ற நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.**

○○○


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**14 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2018**

| | |
|---|---|
| කතෝලික ධර්මය | I, II |
| **கத்தோலிக்க திருமறை** | **I, II** |
| Catholicism | I, II |

2018.12.03 / 0830 - 1140

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடங்கள் |
| Additional Reading Time | - | 10 minutes |

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## கத்தோலிக்க திருமறை I

**கவனிக்க :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** திருவிவிலியம் ஒரு தனி நூல் அல்ல பல நூல்களைக் கொண்டதாகையால் அது,
(1) ஓர் அகராதியாகும். (2) ஓர் விவரணமாகும்.
(3) ஓர் கலைக்களஞ்சியமாகும். (4) ஓர் நூலகமாகும்.

**2.** கத்தோலிக்க திருமறை எதனை அடிப்படையாகக் கொண்டுள்ளதெனில்,
(1) இறைவார்த்தையினையாகும். (2) திருச்சபை பாரம்பரியத்தினையாகும்.
(3) அப்போஸ்தலிக்க மரபினையாகும். (4) திருச்சபையினையாகும்.

**3.** மனிதனின் கடந்த காலத்தில் இறைவனின் செயற்பாடு உறுதிப்படுத்தப்படுவது
(1) இலக்கிய நூல்கள் மூலமாகும். (2) ஞான இலக்கியத்தின் மூலமாகும்.
(3) வரலாற்று நூல்கள் மூலமாகும். (4) இறைவாக்கினர் நூல்கள் மூலமாகும்.

**4.** பின்வரும் விபரங்களின் மீது உமது கவனத்தைச் செலுத்தவும்
A - வரலாற்று அறிஞராகும்
B - மருத்துவராகும்
C - ஓவியக் கலைஞராகும்
D - தூய பவுலின் மறைத்தூதுரைப் பயணத்தில் கலந்துக் கொண்டவராகும்
மேற்கூறிய விபரங்களுக்கேற்ப உறுதிப்படுத்தப்படும் நபர் ஆவது
(1) புனித யோவான் (2) புனித லூக்கா (3) புனித பேதுரு (4) புனித பர்னபா

**5.** கிபயோன் பிரதான மலையுச்சியில் அமைந்துள்ள பலிபீடத்தில் பலிச் செலுத்தச் சென்றவர்
(1) தாவீது அரசன் (2) ஏரோது அரசன் (3) பிலாத்து அரசன் (4) சாலமோன் அரசன்

**6.** அநேகமாக சமுதாயத்தில் உயர் வகுப்பினருக்கு வழங்கப்படும் அறிவுரைகளை உள்ளடக்கிய எபிரேய ஞானத்தின் பிரிவு ஆவது,
(1) குடும்ப மற்றும் கோத்திர ஞானம் (2) அரசசபை ஞானம்
(3) ஆன்மீக ஞானம் (4) அன்றாட வாழ்க்கைக்குரிய ஞானம்


Download all Past Papers> https://bookbeeid.com/resource/past-papers/

7. லூக்கா 19:8ன் படி "யாரிடமாவது நான் அநீதியாகப் பெற்றிருந்தால் நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுப்பேன்" இவ்வாறு இயேசுவிடம் கூறியவர் யார்?
(1) செல்வந்த இளைஞன்
(2) அறிவற்ற செல்வந்தன்
(3) ஊதாரிப்பிள்ளை
(4) சக்கேயு

8. இயேசு அப்போஸ்தவர்களுக்குக் காட்சி கொடுத்து,
A - அவர்களைத் திடப்படுத்தினார்.
B - அவர்கள் மீது ஊதினார்.
C - அவர்களுக்கு தூய ஆவியின் கொடைகளை வழங்கினார்.
D - அவர்களுக்குப் பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை வழங்கினார்.
மேற்கூறிய நிகழ்வுகள் இடம்பெற்ற சந்தர்ப்பங்கள்
(1) எம்மாவுஸ் பயணத்தின் போதாகும்.
(2) வாரத்தின் முதல்நாள் அதிகாலை வேளையிலாகும்.
(3) பாஸ்கா ஞாயிறன்று மாலையிலாகும்.
(4) கல்லறை அருகிலாகும்.

9. அருட்பணி யாக்கோபே கொன்சால்வேஸ் அடிகளாரால் எழுதப்பட்ட இலக்கிய நூல்களுள் தபக்காலத்தில் பயன்படுத்தப்படும் நூல்
(1) தேவவேதபுராணம்
(2) வேதகாவியம்
(3) மங்கள கீதம்
(4) வியாகுல பிரசங்கம் (பசாம்)

10. லன்சியானோ நகரில் புதுமையின் மாமிசத் துண்டிலும் ரியூரின் நகரில் கிறிஸ்துவின் திருத்துகிலிலும் காணப்பட்ட ஒரே இன இரத்தம் எந்த வகையைச் சேர்ந்தது?
(1) A
(2) B
(3) A B பொசிடிவ்
(4) O பொசிடிவ்

11. 2005 சித்திரை மாதம் 02 ஆம் திகதி இறைபதம் அடைந்து 2011 வைகாசி மாதம் 01 ஆம் திகதி அருளாளர் நிலைக்கும் 2014 சித்திரை மாதம் 27 ஆம் திகதி புனிதர்கள் நிலைக்கும் உயர்த்தப்பட்டவர்
(1) தூய திருத்தந்தை II ஆம் அருளப்பர் சின்னப்பர் ஆவார்.
(2) தூய மரியா கொறற்றி ஆவார்.
(3) தூய அன்னை திரேசா ஆவார்.
(4) தூய திருத்தந்தை XXIII ஆம் அருளப்பர் ஆவார்.

12. கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வியின்படி ஓர் பொய்யை உறுதிப்படுத்த இறைவனின் பெயரைப் பயன்படுத்துதல்,
(1) தேவ நிந்தையாகும்.
(2) தேவ கோபமாகும்.
(3) தேவ சாபமாகும்.
(4) தேவ துரோகமாகும்.

13. திருமண ஒழுக்க வாழ்வைப் பாதுகாக்க வேண்டியவர்
(1) திருமணமான கணவர்
(2) திருமணத் தம்பதிகள்
(3) மணமாகாத இளைஞர், யுவதிகள்
(4) திருமணமான பெண்கள்

14. அந்நியர் ஆட்சிக்காலத்தில் இந்நாட்டுக்கு வருகை தந்த துறவற சபைகள் மத்தியில் ஆங்கிலேயர் காலத்தில் இந்நாட்டுக்கு வருகை தந்த துறவற சபை எது?
(1) சில்வெஸ்டர் ஆசீர்வாதப்பர் சபை
(2) டொமினிக்கன் சபை
(3) ஒறத்தோரியன் சபை
(4) பிரான்சிஸ்கன் சபை

15. பழைய ஏற்பாட்டில் முதல் முறையாக அப்பமும் திராட்சை இரசமும் கொண்டு வந்து கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தவர்,
(1) இயேசு கிறிஸ்து ஆவார்.
(2) ஆரோன் ஆவார்.
(3) யோசுவா ஆவார்.
(4) மெல்கிசெதேக் ஆவார்.

16. உண்மையைக் கடைப்பிடிக்கவும், உண்மைக்குச் சான்று பகரவும் எத்தனையாவது கட்டளை நமக்குக் கூறுகிறது?
(1) ஏழாவது (2) எட்டாவது (3) ஒன்பதாவது (4) பத்தாவது


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

17. 'இறைவனின் நடுநிலையாளர்' என்னும் சுற்றுமடல் இல 20இல் திருவழிபாடு பற்றி விளக்கம் தருபவர்,
(1) மேன்மைதங்கிய திருத்தந்தை II ஆம் அருளப்பர் ஆவார்.
(2) மேன்மைதங்கிய திருத்தந்தை XII ஆம் பத்திநாதர் ஆவார்.
(3) மேன்மைதங்கிய திருத்தந்தை VI ஆம் சின்னப்பர் ஆவார்.
(4) மேன்மைதங்கிய திருத்தந்தை XIII ஆம் சிங்கராயர் ஆவார்.

18. திருவழிபாட்டில் வாரத்தின் விசேடமான நாளாகக் கொள்ளப்படுவது,
(1) பாஸ்கா ஞாயிறு ஆகும் (2) கடன் திருநாட்களாகும்
(3) ஞாயிறு தினமாகும் (4) குருத்தோலை ஞாயிறு ஆகும்

19. பின்வரும் நாட்கள் கத்தோலிக்கருக்கு முக்கியமான நாட்களாகும்.
A - குருத்தோலை ஞாயிறு
B - பெரிய வியாழன்
C - பெரிய வெள்ளி
D - அல்லோலூயா சனிக்கிழமை
மேற்கூறிய தினங்களில் மிகவும் புனிதமான மூன்று நாட்களையும் குறிக்கும் எழுத்துத் தொகுதியை தெரிவுசெய்க
(1) A,B,C (2) A,B,D (3) A,C,D (4) B,C,D

20. திருப்பலியின் இறுதி ஆசீரினால் எம்மை வழியனுப்பி வைப்பது
(1) மறைபரப்புச் செயற்பாட்டிற்காகும்.
(2) கிறிஸ்தவ குடும்பத்திற்காகும்.
(3) மறைப் பாடசாலைக்காகும்.
(4) பங்கேற்கும் சமூகத்திற்காகும்.

21. ஐந்நூல் உருவாவதற்குப் பங்களிப்புச் செய்த பிரதான இறையியல் மரபுகளின் எண்ணிக்கை யாது?
(1) ஒன்று (2) இரண்டு (3) மூன்று (4) நான்கு

22. குருக்களின் படிப்பினைகளை முன் வைப்பதால் சமய வழிபாடுகள் மற்றும் திருவழிபாடு பற்றி விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ள மரபாக அமைவது
(1) குருக்கள் (2) யாவே (3) எலோகிம் (4) இணைச்சட்டம்

23. பின்வரும் நூல்களுள் இணைத்திருமுறை நூல்கள் மட்டும் உள்ளடங்கும் தொகுதியைத் தெரிவுசெய்க
A - தோபித்து
B - ஆகாய்
C - யூதித்து
D - செக்கரியா
(1) A,B (2) A,C (3) A,D (4) B,D

24. தூய பேதுருவின் மொழிபெயர்ப்பாளராக இருந்தவர்,
(1) தூய மத்தேயு ஆவார். (2) தூய லூக்கா ஆவார்.
(3) தூய மாற்கு ஆவார். (4) தூய யோவான் ஆவார்.

25. பாவத்தில் விழுந்த மனிதனுக்குக் கடவுள் தண்டனை வழங்கிய விதத்தினைப் பின்வரும் கூற்றுக்கள் மூலம் எடுத்துக் காட்டலாம்.
A -"உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன்."
B -"மண்ணுலகில் நீ நாடோடியாக அலைந்து திரிவாய்."
C -"உன் பொருட்டு நிலம் சபிக்கப்பட்டுள்ளது."
D -"நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்குத் திரும்புவாய்."
மேற்காணப்படும் கூற்றுக்களுள் காயினுக்கு கொடுத்த தண்டனையைக் குறிக்கும் எழுத்து எது?
(1) A (2) B (3) C (4) D

26. தொடக்க நூல் 12:2இன் படி "உன்னை நான் பெரிய இனமாக்குவேன்." எனக் கடவுள் வாக்குக்கொடுத்தது
(1) மோசேக்கு (2) நோவாவிற்கு (3) ஆபிரகாமிற்கு (4) யோசேப்பிற்கு


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

27. திருமுழுக்கு யோவானின் தூதுரைப்பணி ஆரம்பிக்கப்பட்டது
(1) கபாலை மலை அருகில் ஆகும். (2) எருசலேம் ஆலயத்தில் ஆகும்.
(3) பாலை நிலத்தில் ஆகும். (4) யோர்தான் ஆற்றை அடுத்த பகுதிகளில் ஆகும்.

28. இயேசுவை சோதித்தபோது, அவர் சாத்தானுக்கு கூறிய வார்த்தைகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - "மனிதன் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை"
B - "உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கு"
C - "அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக"
D - "உன் கடவுளாகிய ஆண்டவரை சோதிக்க வேண்டாம் என்று சொல்லி உள்ளதே"
மேற்கூறப்பட்டுள்ளவற்றுள் கோயிலின் உயர்ந்த பகுதியில் வைத்து இயேசு கூறிய வெளிப்பாட்டைக் குறிக்கும் எழுத்தை தெரிவு செய்க
(1) A (2) B (3) C (4) D

29. நற்செய்தி நூலில் புதுமைகள் இடம்பெறுவதற்கு மிகவும் அவசியமானதாக விளங்கியது
(1) அனுதாபமாகும்.
(2) பகிரங்கமாதலாகும்.
(3) நம்பிக்கையாகும்.
(4) வேண்டுகோளாகும்.

30. விதைப்பவன் பற்றிய உவமையில் 'விதைகள் விழுந்த நிலத்தினைப்' பின்வருமாறு குறிப்பிடலாம்.
A - வழியோரம் விழுந்த விதைகள்
B - மண் இல்லாப் பாறைப் பகுதியில் விழுந்த விதைகள்
C - முட்செடிகளின் இடையே விழுந்த விதைகள்
D - நல்ல நிலத்தில் விழுந்த விதைகள்
மேற்கூறிய விடயங்களின்படி பறவைகள் விழுங்கிவிட்ட விதைகள் விழுந்த நிலத்தைக் குறிக்கும் எழுத்து யாது?
(1) A (2) B (3) C (4) D

31. இயேசு எட்டுப் பேறுகள் மூலம் எமக்கு எடுத்துக்காட்டியது,
(1) இறை ஆட்சியின் மதிப்பீடுகள் ஆகும். (2) நோன்பு பற்றிய படிப்பினை ஆகும்.
(3) தருமம் செய்வது பற்றிய படிப்பினை ஆகும். (4) பூமியின் உப்பும் உலகின் ஒளியும் ஆகும்.

32. ஓர் குருவாக, ஓர் இறைவாக்கினராக, ஓர் அரசனாக இறைவனுக்கும் மனிதனுக்கும் பணிபுரிய அருள்பொழிவு செய்யும் அருளடையாளம் ஆவது
(1) திருமுழுக்கு (2) குருத்துவம் (3) நோயில் பூசுதல் (4) உறுதி பூசுதல்

33. மரியன்னையின் விண்ணேற்பு திருவிழா இடம்பெறுவது எப்போது?
(1) ஜனவரி 01 (2) ஆவணி 15 (3) வைகாசி 31 (4) மார்கழி 08

34. நோயில் பூசுதல் அருளடையாளத்தை வழங்கும்போது திருத்தைலம் பூசப்படுவது நோயாளியின்,
(1) நெற்றியிலாகும். (2) கைகளிலும் நெஞ்சிலுமாகும்.
(3) நெற்றியிலும் கைகளிலுமாகும். (4) கைகளிலாகும்.

35. குருவானவர் திருச்சபையின் சட்டபூர்வமான சாட்சியாளராகவும், கிறிஸ்துநாதரின் பிரதிநிதியாகவும் நின்று செயற்படும் அருளடையாளம்,
(1) திருமுழுக்கு ஆகும். (2) உறுதிப்பூசுதல் ஆகும்.
(3) நோயில் பூசுதல் ஆகும். (4) மெய்விவாகம் ஆகும்.

36. கி.பி 1833ல் அருளாளர் பிறடிக் ஓசானம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது,
(1) கத்தோலிக்க மாணவர் இயக்கம் ஆகும். (2) இயேசுவின் திரு இருதய சபை ஆகும்.
(3) மரியாயின் சேனை ஆகும். (4) தூய வின்சன் டி போள் சபை ஆகும்.


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

37. கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி இலக்கம் 2797ன் படி நாம் கேட்கும் அனைத்தும் நமக்கு தவறாது கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு கர்த்தர் கற்பித்த செபத்தை செபிக்க வேண்டிய முறை,

(1) பெருமையோடும் மதிப்போடும் ஆகும்.
(2) தாழ்மையாகவும் சந்தோசமாகவும் ஆகும்.
(3) மனஸ்தாபத்தோடும் மனம் வருந்துதலோடும் ஆகும்.
(4) தைரியத்தோடும் ஒருமனப்பட்டும் ஆகும்.

38. "சருவேசுரனுடைய பரிசுத்த மாதாவே" என்னும் செபம் கிறிஸ்துவிற்குப் பின் எத்தனையாம் நூற்றாண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது?

(1) முதலாம் நூற்றாண்டு
(2) இரண்டாம் நூற்றாண்டு
(3) மூன்றாம் நூற்றாண்டு
(4) நான்காம் நூற்றாண்டு

39. மரியன்னையின் புகழ்ச்சிப்பாடல் பயன்படுத்தப்படுவது,

(1) காலை திருப்புகழ்மாலையில்
(2) மதியம் திருப்புகழ்மாலையில்
(3) மாலை திருப்புகழ்மாலையில்
(4) இரவு திருப்புகழ்மாலையில்

40. யூத மக்கள் செபக்கூட்டத்தில் செபிப்பதற்காகப் பயன்படுத்தியது,

(1) திருப்பாடல்களின் பாடல்களையாகும்.
(2) வெளிப்பாட்டு இலக்கியத்தையாகும்.
(3) ஞான இலக்கியத்தையாகும்.
(4) இணைச்சட்ட நூலையாகும்.

* *

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2018
க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018

විෂයය අංකය / பாட இலக்கம்: 14 | විෂයය / பாடம்: கத்தோலிக்க திருமறை

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 1 | 21. | 4 | 31. | 1 |
| 02. | 1 | 12. | 1 | 22. | 1 | 32. | 1 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 2 | 33. | 2 |
| 04. | 2 | 14. | 1 | 24. | 3 | 34. | 3 |
| 05. | 4 | 15. | 4 | 25. | 2 | 35. | 4 |
| 06. | 2 | 16. | 2 | 26. | 3 | 36. | 4 |
| 07. | 4 | 17. | 2 | 27. | 4 | 37. | 2 |
| 08. | 3 | 18. | 3 | 28. | 4 | 38. | 3 |
| 09. | 4 | 19. | 4 | 29. | 3 | 39. | 3 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 1 | 40. | 1 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින் / புள்ளி வீதம்

**මුළු ලකුණු** / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන කීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: **25 / 40**

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: **25 / 40**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**14 T I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2018**

කතෝලික ධර්මය **I, II**
**கத்தோலிக்க திருமறை** **I, II**
Catholicism **I, II**

**கத்தோலிக்க திருமறை II**

※ **முதலாம்** வினாவுக்கும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) தனிநபர் அல்லது மக்களின் பிரச்சினைகளும் அவற்றுக்குரிய தீர்மானங்களும் இறைக்கண்ணோட்டத்துடன் முன்வைக்கப்பட்டுள்ள, மக்களால் விரும்பப்படுகின்ற வரலாற்று நூல்கள் **இரண்டினையும்** பெயரிடுக.

(ii) தூய பவுல் தமது இரண்டாவது தூதுரைப் பயணத்தை ஆரம்பித்த பின்னர், இடையில் அவருடன் இணைத்துகொண்ட **இருவரும்** யாவர்?

(iii) பழைய ஏற்பாட்டில் யோசேப்பு போதிப்பாரின் மனைவியின் விருப்பத்திற்கு இணங்கியிருப்பின் அவர் மீறும் கட்டளைகள் **இரண்டும்** எவை?

(iv) எதிர்நோக்கிற்கு எதிரான பாவங்கள் **இரண்டையும்** பெயரிடுக.

(v) திருவருகைக் காலத்திலும் நத்தார் காலத்திலும் திருவழிபாட்டு நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் நிறங்கள் **இரண்டினையும்** ஒழுங்கு முறைப்படி எழுதுக.

(vi) ஐந்நூல் எந்த **இரண்டு** விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது?

(vii) யாவே பாரம்பரியத்தின் (J) பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(viii) மறைமாவட்டக் குருக்களின் வார்த்தைப்பாடுகள் **இரண்டையும்** எழுதுக.

(ix) **இருவகை** இரக்கச் செயல்களையும் பெயரிடுக.

(x) கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூலின்படி தியானம் என்பது தேடலாகும். இத்தேடலில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய **இரு** விடயங்களையும் குறிப்பிடுக.

**2.** (i) தூய யோசப்வாஸ் அடிகளாரால் ஆலயப் பணிக்காகப் பொது நிலையினர் மத்தியில் நியமிக்கப்பட்ட தலைவர்கள் **இரு** வகையினரைப் பெயரிடுக.

(ii) கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு உட்பட்டதோடு இந்நாட்டில் பணிபுரிய வருகைதந்த வேறு துறவற சபைகளைச் சேர்ந்த மறை போதகக் குழுக்கள் **மூன்றினைப்** பெயரிடுக.

(iii) தூய யோசப்வாஸ் அடிகளாரின் பணியின் மூலம் உமது வாழ்க்கைக்குக் கற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் **ஐந்தினை** விளக்குக.

**3.** (i) திருப்பலியின் ஆரம்பத்தில் காணப்படும் மேன்மைமிகு அடையாளங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(ii) காணிக்கை கொடுப்பதன் நோக்கங்கள் **மூன்றும்** எவை?

(iii) ஞாயிறு திருப்பலியில் கருத்துள்ள முறையிலும் உயிர்ப்பாகவும் பங்குபற்ற நீர் மேற்கொள்ளும் படிமுறைகள் **ஐந்தினை** விளக்குக.

**4.** (i) எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்களின் **இருவகைகளும்** எவை?

(ii) இறைவாக்குரைக்கும்போது எசாயா, எரேமியா, எசேக்கியேஸ் இறைவாக்கினர்கள் பயன்படுத்திய **மூன்று** விதமான சொற்பதங்களையும் குறிப்பிடுக.

(iii) திருமுழுக்கின் வழியாகப் பெற்ற இறைவாக்கு அழைப்பிற்கு நீர் எவ்வாறு சான்று பகருவீர் என **ஐந்து** காரணிகள் மூலம் விளக்குக


Download all Past Papers >> https://bookbeekid.com/resource/past-papers/

**5.** (i) குருக்களில் **இருவகையினரையும்** பெயரிடுக.

(ii) சமூகப் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட அருளடையாளங்கள் இரண்டின் வழியாக நிறைவேற்றப்படும் விசேட பணிகள் **மூன்றினை** குறிப்பிடுக.

(iii) தேவ அழைத்தலை விரும்பியிருக்கும் உமது நண்பன்/நண்பி ஒருவருக்கு ஊக்கம் அளிக்க நீர் கூறும் ஆலோசனைகள் **ஐந்தினை** விபரிக்குக.

**6.** (i) திருவழிபாட்டு ஆண்டில் மரியன்னையை கௌரவிக்க, திருச்சபை கொண்டாடும் கடன் திருநாட்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) மரியன்னை காட்சி கொடுத்ததைப் பின்னணியாகக் கொண்ட உலக பிரசித்திபெற்ற திருப்பதிகள் **மூன்றினைப்** பெயரிடுக.

(iii) மரியன்னையின் விசுவாச வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு, விசுவாசத்திலிருந்து விலகிச்செல்லும் உமது நண்பர் ஒருவருக்கு எடுத்துக் கூறக்கூடிய அறிவுரைகள் **ஐந்தினை** விளக்குக.

**7.** பின்வரும் தலைப்புகளில் **இரண்டைத்** தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக.

(i) வார்த்தைப்பாடுகளும் நேர்த்தியும்

(ii) தபக்காலம்

(iii) ஞானப் பெற்றோரின் பொறுப்புகள்

(iv) கத்தோலிக்க மறைப்பாடசாலை

* * *



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# கத்தோலிக்க திருமறை II

**வினா இல. 01**

**நோக்கம் :**

இறை வார்த்தையை அடிப்படையாகக் கொண்டு நல்ல கிறிஸ்தவ வாழ்வு வாழ ஆன்மீக ஊட்டம் பெற்றுக் கொடுத்தல்.

**புள்ளி** : 2 x 10 = 20

i. தனிநபர் அல்லது மக்களின் பிரச்சினைகளும் அவற்றுக்குரிய தீர்மானங்களும் இறை கண்ணோட்டத்துடன் முன்வைக்கப்பட்டுள்ள, மக்களால் விரும்பப்படுகின்ற வரலாற்று நூல்கள் இரண்டையும் பெயரிடுக.
1. ரூத்
2. எஸ்தர் (1 x 2= 02 புள்ளிகள் )

ii. தூய பவுல் தமது இரண்டாவது தூதுரைப் பயணத்தை ஆரம்பித்த பின்னர், இடையில் அவருடன் இணைந்துகொண்ட இருவரும் யாவர்?
1. திமோத்தேயு
2. தூய லூக்கா (1 x 2= 02 புள்ளிகள் )

iii. பழைய ஏற்பாட்டில் யோசேப்பு போத்திப்பாரின் மனைவியின் விருப்பத்திற்கு இணங்கியிருப்பின், அவர் மீறும் கட்டளைகள் இரண்டும் எவை?
1. ஆறாவது கட்டளை
2. ஒன்பதாம் கட்டளை (1 x 2= 02 புள்ளிகள் )

iv. எதிர்நோக்கிற்கு எதிரான பாவங்கள் இரண்டையும் பெயரிடுக.
1. எதிர்நோக்கை இழத்தல்
2. மிதமிஞ்சிய எதிர்நோக்கு (1 x 2= 02 புள்ளிகள் )

v. திருவருகைக் காலத்திலும் நத்தார் காலத்திலும் திருவழிபாட்டு நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் நிறங்கள் இரண்டினையும் ஒழுங்கு முறைப்படி எழுதுக.
1. ஊதா
2. வெள்ளை (1 x 2= 02 புள்ளிகள் )

vi. ஐந்நூல் எந்த இரண்டு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது?
1. இஸ்ரயேல் மக்கள் பாரம்பரியமாகக் கொண்டிருந்த இறை நம்பிக்கை
2. அனுபவங்கள் (1 x 2= 02 புள்ளிகள் )

vii. யாவே பாரம்பரியத்தின் (J) பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
1. அதன் இலக்கிய நடை எளிமையானது, தெளிவானது.
2. பல்தன்மை கொண்டது.
3. இறைவன் மனிதனுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதை வலியுறுத்துகின்றது.
4. இறைவன் யாவே என்ற பெயரால் அழைக்கப்படுகின்றார்.
5. இது கதைப்பாணியிலும் நாடகப்பாணியிலும் அமைந்துள்ளது.
6. கற்பனை பண்ணிப் பார்க்கக் கூடியது. (1 x 2= 02 புள்ளிகள் )

(இவற்றில் 2 விடைகள் எழுதியிருப்பின் 2 புள்ளிகள் வழங்கவும்.)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

viii. மறைமாவட்டக் குருக்களின் வார்த்தைப்பாடுகள் இரண்டையும் எழுதுக.

1. கீழ்ப்படிதல்
2. குருத்துவத் தூய்மை (1 x 2= 02 புள்ளிகள் )

ix. இருவகை இரக்கச் செயல்களையும் பெயரிடுக.

1. உடல் சார்ந்த இரக்கச் செயல்கள்
2. ஆன்மீக இரக்கச் செயல்கள் (1 x 2= 02 புள்ளிகள் )

x. கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூலின்படி தியானம் என்பது தேடலாகும். இத்தேடலில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய இரு விடயங்களையும் குறிப்பிடுக.

1. கிறிஸ்தவ வாழ்வின் குறிக்கோள்
2. கிறிஸ்தவ வாழ்வு வாழவேண்டிய முறை (1 x 2= 02 புள்ளிகள் )

(ஒவ்வொரு வினாவுக்கும் இரு விடயங்களும் குறிப்பிடப்பட்டிருப்பின் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கவும்.)

2. நோக்கம்

தூய யோசப்வாஸ் அடிகளாரின் மறைத்தூதுப் பணியில் காணப்படும் உயர்ந்த பண்புகளுக்கேற்ப, தமது வாழ்வை அமைத்துக் கொள்ளல்.

**வினா இலக்கம். 02**

**புள்ளி:** i. $\frac{2}{2}$ ii. $\frac{3}{3}$ iii. $\frac{5}{5} = \frac{10}{10}$

i. தூய யோசப்வாஸ் அடிகளாரால் ஆலயப் பணிக்காகப் பொதுநிலையினர் மத்தியில் நியமிக்கப்பட்ட தலைவர்கள் இரு வகையினரைப் பெயரிடுக.

1. அண்ணாவியார்
2. மூப்பர்
3. சக்கிறிஸ்தியான் (1 x 2= 02 புள்ளிகள் )

ii. கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு உட்பட்டதோடு, இந்நாட்டில் பணிபுரிய வருகைதந்த வேறு துறவற சபைகளைச் சேர்ந்த மறை போதகக் குழுக்கள் மூன்றினைப் பெயரிடுக.

1. இயேசு சபை மறைபோதகர்கள்
2. டொமினிக்கன் சபை மறைபோதகர்கள்
3. அகுஸ்தினார் சபை மறைபோதகர்கள் (1 x 3= 03 புள்ளிகள் )

iii. தூய யோசப்வாஸ் அடிகளாரின் பணியின் மூலம் உமது வாழ்க்கைக்குக் கற்றுக்கொள்ளக் கூடிய முன்மாதிரிகள் ஐந்தினை விளக்குக.

1. திருமுழுக்கினால் நாம் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கேற்ப, எதிர்வரும் சவால்களுக்கு முகங்கொடுத்து, இயேசுவின் படிப்பினைக்கேற்ப மறையைப் பரப்புதல்.
2. எமது ஆற்றல்களையும் திறமைகளையும் பிறரின் தேவைகளுக்காகப் பயன்படுத்தல்.
3. இறைவார்த்தையின்படி வாழ்வதோடு, அதைச் செயலிலும் காட்டுதல்.
4. மிக எளிமையான வாழ்க்கை வாழ்தல்.
5. இறைவழிபாடுகளில் பங்குபற்றி, தினமும் நற்கருணையை உட்கொண்டு இறைவனுக்கு சான்று பகர்தல்.
6. அவரைப்போல் எவ்வேளையிலும் இறைவனில் தங்கியிருத்தல். (1 x 5= 05 புள்ளிகள் )

(இத்தகைய கருத்துக்கள் ஐந்து எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.)


Download all Past Papers > https://bookbeekid.com/resource/past-papers/

3. நோக்கம்

திருப்பலியை வாழ்வின் மையமாகக் கொண்டு, அர்த்தமுள்ள முறையில் பங்குபற்றுவதனூடாக இறைவனைத் தமது வாழ்வில் அனுபவித்தல்.

**வினா இலக்கம். 03**

**புள்ளி:** i. $\frac{2}{2}$ ii. $\frac{3}{3}$ iii. $\frac{5}{5}$ $=$ $\frac{10}{10}$

i. திருப்பலியின் ஆரம்பத்தில் காணப்படும் மேன்மைமிகு அடையாளங்கள் இரண்டினைப் பெயரிடுக.

1. எரியும் விளக்கு
2. சிரம் தாழ்த்தி வணங்குதல்
3. பலிப்பீடத்தை முத்தி செய்தல்
4. தூபம் காட்டுதல் (1 x 2= 02 புள்ளிகள் )

(இவற்றில் 2 விடைகள் இருப்பின் 2 புள்ளிகள் வழங்கவும்.)

ii. காணிக்கை கொடுப்பதன் நோக்கங்கள் மூன்றும் எவை?

1. அப்பமும் இரசமும் கொண்டு வருதல்.
2. ஏழைகளுக்குக் கொடுக்கக்கூடிய காணிக்கைப் பொருட்களைப் கொண்டு வருதல்.
3. திருச்சபையின் தாபரிப்பிற்காக காணிக்கை கொடுத்தல். (1 x 3= 03 புள்ளிகள் )

iii. ஞாயிறு திருப்பலியில் கருத்துள்ள முறையிலும் உயிர்ப்பாகவும் பங்குபற்ற நீர் மேற்கொள்ளும் படிமுறைகள் ஐந்தினை விளக்குக.

1. திருப்பலி வாசகங்களை முன்கூட்டியே வாசித்து, தியானித்து ஆயத்தமாயிருத்தல்.
2. திருப்பலியில் பங்குகொள்ள நேரகாலத்துடன் ஆலயத்திற்கு வருதல்.
3. உடல், ஆன்மீக ஆயத்தங்களுடனிருத்தல்.
4. திருப்பலியின் ஆரம்பம் முதல் இறுதிவரை குருவானவருடன் இணைந்து திருப்பலியில் சொல்லப்படும் செபங்களுக்கு பதிலளித்தல்.
5. காணிக்கைப் பவனியில் கலந்து கொள்ளக் காணிக்கைப் பொருட்களை எடுத்து வருதல்.
6. திருப்பலியில் பாடப்படும் பாடல்களில் பங்குபற்றல்.
7. மறையுரைக்கு செவிமடுத்து வாழ்க்கையோடு அதனை இணைத்துக் கொள்ளல்.
8. திவ்விய நற்கருணை விருந்தில் பங்குபற்றுதல்.
9. நமது தேவைகளையும் கவலைகளையும் இறைவனிடம் விசுவாசத்துடன் ஒப்புக்கொடுத்து, மகிழ்ச்சியுடன் திருப்பலியில் பங்குபற்றுதல்.
10. ஞாயிறு திருப்பலியின் மூலம் பெற்றுக்கொண்ட இறையருளையும் ஆசியையும் வாழ்க்கையில் வாழத் தீர்மானித்துக் கொள்ளுதல். (1 x 5= 05 புள்ளிகள் )

(இது போன்ற கருத்துக்கள் உட்பட ஐந்து விடயங்கள் இருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.)


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

4. நோக்கம்

இறைவார்த்தைக்கு சான்று பகர்ந்த இறைவாக்கினர்களைப் போன்று இன்று தமது அழைப்பைப் புரிந்துகொண்டு இறைவாக்குப் பணியில் ஈடுபட்டு, இறைவார்த்தையைப் பரப்புதல்.

**புள்ளி:** i. $\frac{2}{2}$ ii. $\frac{3}{3}$ iii. $\frac{5}{5}$ = $\frac{10}{10}$

i. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்களின் இருவகைகளும் எவை?

1. பெரிய இறைவாக்கினர்
2. சிறிய இறைவாக்கினர் (1 x 2= 02 புள்ளிகள் )

ii. இறைவாக்குரைக்கும் போது எசாயா, எரேமியா, எசேக்கியேல் இறைவாக்கினர்கள் பயன்படுத்திய மூன்று விதமான சொற்பதங்களையும் குறிப்பிடுக.

1. ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளுகின்றார்.
2. என்கிறார் ஆண்டவர்
3. ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது. (1 x 3= 03 புள்ளிகள் )

iii. திருமுழுக்கின் வழியாகப் பெற்ற இறைவாக்கு அழைப்பிற்கு நீர் எவ்வாறு சான்று பகருவீர் என ஐந்து காரணிகள் மூலம் விளக்குக.

1. இறைவார்த்தைப் பணியாளனாகச் செயற்படுதல்.
2. இறைவார்த்தைக்கு மாறாகச் செயற்படுபவர்களை இறைவார்த்தையின் படி வாழ வழிகாட்டுதல்.
3. மறைபரப்புப் பணிக்கு உதவுதல்.
4. உண்மைக்குச் சான்று பகருதல், அதன்படி வாழுதல்.
5. ஆலயத்தில் இறைவனின் உயிருள்ள பிரசன்னம் இருப்பதால் பயபக்தியுடன் நடந்து கொள்ளல்.
6. மறைப்பாடசாலைப் பணிகளில் பங்குகொள்ளுதல்.
7. இறைவாக்கினர் எரேமியாவைப் போன்று பலவீனங்கள் மத்தியில் இறைவன் நமக்கு தரும் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்ற இறைவல்லமையைப் பெற்றுக் கொள்ளல்.
8. எமக்குக் கிடைத்த இறையழைத்தலுக்கு இறைவனுக்கு நன்றி கூறுதல். (1 x 5= 05 புள்ளிகள் )

(இத்தகைய கருத்துக்கள் 5 இருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்)


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

5. நோக்கம்

அருளடையாளங்களைப் பெற்றுக்கொள்ளுதலும் குருத்துவம் என்னும் அருள் அடையாளத்தின் மூலம் நிறைவேற்றப்படும் பணியின் மேன்மையை விளங்கிக் கொள்ளுதலும்.

**வினா இலக்கம் - 05**

**புள்ளி:** i. $\frac{2}{2}$ ii. $\frac{3}{3}$ iii. $\frac{5}{5} = \frac{10}{10}$

i. குருக்களில் இரு வகையினரையும் பெயரிடுக.

1. மறைமாவட்டக் குருக்கள்
2. துறவற சபைக்குருக்கள் (1 x 2= 02 புள்ளிகள் )

ii. சமூகப் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட அருளடையாளங்கள் இரண்டின் வழியாக நிறைவேற்றப்படும் விசேட பணிகள் மூன்றினைக் குறிப்பிடுக.

1. மறைத்தூதுரைப் பணியை ஆற்றுதல்.
2. இறை மக்கள் சமூகத்தைக் கட்டியெழுப்புதல்.
3. தமதும் பிறரதும் மீட்புக்காக செயற்படல். (1 x 3= 03 புள்ளிகள் )

iii. தேவ அழைத்தலை விரும்பியிருக்கும் உமது நண்பன் / நண்பி ஒருவருக்கு ஊக்கம் அளிக்க நீர் கூறும் ஆலோசனைகள் ஐந்தினை விபரிக்குக.

1. திருமுழுக்கின் வழியாகப் பெற்ற மூவித பணிகளுக்கு ஏற்ப இறை சேவைக்காக முன்வருதல் ஓர் பாக்கியம் என்பது.
2. பல்லாயிரம் பேர் மத்தியில் பலவீனரான உம்மை இறைவன் தேர்ந்து கொள்ளக் காரணம், உம்மீது இறைவன் கொண்டுள்ள விசேட அன்பு என்பது.
3. இயேசு தமது இவ்வுலக வாழ்வில், சீடர்களைத் தேர்ந்துகொண்டு அவர்களுக்கு விசேட வரங்களை அளித்தார் என்பது.
4. இறை விருப்பத்திற்கேற்ப தேவ அழைத்தலை நீர் தேர்ந்து கொள்ளத் தூய ஆவியாரே உம்மில் செயற்பட்டார் என்பது.
5. இயேசுவைப்போல் உமது வாழ்வை மக்கள் சேவைக்காக அர்ப்பணிக்க உடன்பட்டது, தமக்குப் போல் மற்றவர்களுக்கும் ஓர் ஆசீர்வாதம் என்பது.
6. எவ்வேளையும் இறைவனில் தங்கியிருத்தல், அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிதலின் முக்கியத்துவம் என்பது.
7. தேவ அழைத்தலைத் தேர்ந்துகொண்டு, சவால்களுக்கு முகங்கொடுத்து அஞ்சாது செயற்படத் தேவையான வரங்கள் வேண்டி நானும் செபிப்பதாக வாக்குறுதி கூறுதல்.

(1 x 5= 05 புள்ளிகள் )

(இத்தகைய கருத்துக்கள் 5 இருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்)


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

6. நோக்கம்

மரியன்னைக்கு நாம் செலுத்தும் மரியாதை பக்தியை மென்மேலும் வளர்ச்சியடையச் செய்தலும் அன்னையின் பரிந்துரையினைப் பெற்றுக் கொள்ளுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி உறுதிப்படுத்துவதும்

**வினா இலக்கம் - 06**

**புள்ளி:** i. $\frac{2}{2}$  ii. $\frac{3}{3}$  iii. $\frac{5}{5}$ = $\frac{10}{10}$

i. திருவழிபாட்டு ஆண்டில் மரியன்னையை கௌரவிக்க, திருச்சபை கொண்டாடும் கடன் திருநாட்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

1. ஜனவரி 01 - புனித மரியா இறைவனின் தாய்
2. ஆகஸ்ட் 15 - மரியன்னையின் விண்ணேற்பு விழா
3. டிசம்பர் 8 - மரியாவின் அமல உற்பவத் திருவிழா (1 x 2= 02 புள்ளிகள் )

(இவ்விடையில் மாதமும் திகதியும் அல்லது திருவிழாவை மட்டும் எழுதியிருப்பின் புள்ளிகள் 02 வழங்கவும்.)

ii. மரியன்னை காட்சி கொடுத்ததை பின்னணியாகக் கொண்ட உலக பிரசித்தி பெற்ற திருப்பதிகள் மூன்றினைப் பெயரிடுக.

1. போர்த்துக்கல் - பாத்திமா நகர்
2. பிரான்ஸ் - லூட்ஸ் நகர்
3. இந்தியா - வேளாங்கன்னி (1 x 3= 03 புள்ளிகள் )

iii. மரியன்னையின் விசுவாச வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு, விசுவாசத்திலிருந்து விலகிச்செல்லும் உமது நண்பர் ஒருவருக்கு எடுத்துக் கூறக்கூடிய அறிவுரைகள் ஐந்தினை விளக்குக.

1. அன்னை மரியா கன்னியாக இருந்த போது இறைவனின் அழைப்பைப் பணிவுடன் ஏற்று இறுதிவரை நிறைவேற்றினார்.
2. அன்னை மரியா தமது வாழ்நாள் முழுவதும் எதிர்கொண்டு வந்த சவால்கள் அனைத்திற்கும் முகங்கொடுத்து வேதனைகள் துன்பங்களைப் பொறுமையுடன் சகித்துக்கொண்டார்.
3. இயேசு சிலுவையடியில் தம் தாயைத் தான் அன்பு செய்த திருத்தூதரிடம் ஒப்படைத்தார். இயேசுவின் விண்ணேற்றத்தின் பின் திருத்தூதர்களுடனும் ஏனைய மக்களுடனும் கூட இருந்து அவர்களை விட்டுப் பிரியாமல் இடைவிடாமல் செபத்தில் நிலைத்திருந்தார்.
4. மரியா விண்ணேற்பு அடைந்த பின்னரும் பல்வேறு வழிகளில் தம்மை வெளிப்படுத்தி செபமாலையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளார்.
5. இன்று வரை எமக்காக இறைவனிடம் பரிந்துரைப்பவராகவும் எமது வேண்டுதல்களை இறைவன்பால் எடுத்துச் செல்பவராகவும் செயற்பட்டு வருகின்றார்.
6. மரியன்னை இறைவனின் தாயாக திருச்சபையின் அன்னையாக செயற்பட்டு எம் அனைவரையும் மீட்கும் மீட்பரசியாக செயற்பட்டு வருகின்றார்.

(1 x 5= 05 புள்ளிகள் )

(இது போன்ற விடைகள் ஐந்து எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

7. சிறுகுறிப்பு

நோக்கம்

இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பின் வாழ்வை செயற்படுத்தும் முறையை ஆராய்தல்.

i. வார்த்தைப்பாடுகளும் நேர்த்தியும்

புள்ளி: $\frac{5}{5}$

1. எமது பக்தி முயற்சிகளின் ஒரு பகுதியான அன்றாட செபங்களைத் தவிர மேலும் செபிப்பதற்கு மெழுகுவர்த்தி பற்றவைப்பதற்கு, தான தருமங்களைச் செய்வதற்கு, திருயாத்திரைகளில் ஈடுபடுவதற்கு நேர்த்தி வைக்கிறோம். இந்நேர்த்திகளை நிறைவேற்றுவதால் இறைவனிடம் எமக்குள்ள பயபக்தியையும் அன்பையும் வெளிப்படுத்துகிறோம். மேலும் வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இறைவனுடன் வாக்குறுதி செய்து கொள்ள கிறிஸ்தவர்களாகிய நாம் அழைக்கப்படுகின்றோம். திருமுழுக்கு அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்ளும் போது வாக்குறுதி கொடுக்கின்றோம். இந்நேர்த்திகளையும் வாக்குறுதிகளையும் நிறைவேற்றும் போது அது இறைவனுக்குச் செலுத்தும் மரியாதையினதும் அன்பினதும் அடையாளமாக இருக்கிறது. (1 x 5= 05 புள்ளிகள் )

(இவற்றுள் ஏதாவது ஐந்து விடயங்களைக் குறிப்பிட்டு விளக்கியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்)

நோக்கம்

திருவழிபாட்டு ஆண்டில் தபக்கால மறையுண்மைகளை நினைவு கூர்ந்து செப தப ஒறுத்தல்களோடு வாழ வேண்டும் என்பதை உறுதிப்படுத்துதல்.

ii. தபக்காலம்

புள்ளி: $\frac{5}{5}$

1. விபூதிப் புதன் முதல் பெரிய வியாழன் வரை அனுசரிக்கப்படும்.

2. தவக்காலத்திற்கு பின்வரும் விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.
- இயேசு பகிரங்க வாழ்வை ஆரம்பிக்கும் முன்னர் பாலைவனத்தில் செப, தப வாழ்வில் ஈடுபட்ட காலமாகும்.
- மனம் வருந்தி ஆன்ம பரித்தியாகம் செய்து வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளும் காலமாகும்.
- எமது திருமுழுக்கு வாழ்வைப் புதுப்பிக்கும் காலமாகும். அதாவது பாவத்திற்கு மரித்து புதுவாழ்வுக்குப் பிறக்கும் காலமாகும்.
- உலகியல் ஆசைகளுக்கும் சுயநலத்திற்கும் மரித்து இறைவனின் சுதந்திர மக்களாக வாழும் காலமாகும்.

3. ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபடல், தானதருமங்கள் செய்தல், அகதிகளுக்கு உதவுதல், மன்னித்தல், திருமணித்தியாலம் சிலுவைப்பாதை போன்ற பக்தி முயற்சிகளில் ஈடுபட பரிசுத்த திருச்சபை எமக்கு அழைப்பு விடுக்கின்றது.

4. வளர்ந்தோருக்கான திருமுழுக்குப் பெறுவதற்கு எதிர்பார்த்து இருப்போரை ஆயத்தப்படுத்தும் இறுதிக்காலம் தபக்காலமாகும்.


Download all Past Papers - https://bookbeeku.com/resource/past-papers

5. இக்காலத்தில் அல்லேலூயா, வானவர் கீதம் ( குளோறியா, உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமை உண்டாகுக) பாடுவது தவிர்க்கப்படுகின்றது. (1 x 5= 05 புள்ளிகள் )

(இத்தகைய விடயங்கள் ஐந்தேனும் எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்)

நோக்கம்

ஞானப் பெற்றோர் என்ற முறையில் இறை அருளை செயற்படுத்தும் முறையை அளவிடல்.

iii. ஞானப் பெற்றோரின் பொறுப்புக்கள்

புள்ளி : $\frac{5}{5}$

1. புகுமுக அருளடையாளங்களைப் பெற்று, அதற்கேற்ப தமது வாழ்வைக் கடைப்பிடித்தல்.
2. கிறிஸ்தவ நம்பிக்கையில் வாழ்தல்.
3. கிறிஸ்தவ கடமைகள், பொறுப்புக்கள் பற்றிய அறிவைப் பெற்று அதற்கேற்ப வாழ்தல்.
4. திருச்சபையின் சட்டத்திட்டங்களினால் விலக்கி வைக்கப்படாதவராக முன்மாதிரியாக வாழ்தல்.
5. குழந்தையின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை உடையவர்களாக இருத்தல்.
6. குழந்தையின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் உண்மையான விருப்பம் உடையவர்களாக இருத்தல்.

(1 x 5= 05 புள்ளிகள் )

(இவ்வாறான விடயங்கள் ஐந்து எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.)

நோக்கம்

கத்தோலிக்க மறைப்பாடசாலையின் ஊடாக பொதுநிலையினரின் மறைப்பணி பற்றிய மாணவரின் மனநிலையை பரீட்சித்தல்.

புள்ளி : $\frac{5}{5}$

iv. கத்தோலிக்க மறைப்பாடசாலை

1. இறைவாக்குப் பணியின் பிரதான பணியாக விளங்குவது மறையை அறிவித்தலாகும்.
2. மறையை அறிவித்தல் என்பது குருக்கள், துறவிகளின் பணி மட்டுமல்ல, பொதுநிலையினரதும் இறைவாக்குப் பணியாகும்.
3. பொதுநிலையினர் கிறிஸ்துவின் வார்த்தையை நம்பிக்கையோடு ஏற்றுத் தங்கள் சாட்சிய வாழ்வினால், அதாவது தங்கள் சொல், நற்செய்திப் பணி, மறைக்கல்வி கற்பித்தல் ஆகியவற்றால் இறைவார்த்தைப் பணியில் பங்கேற்கிறார்கள்.
4. இப்பணி உலகின் அன்றாட சூழ்நிலைகளில் நிறைவேற்றப்படுவதால் சிறப்புப் பயனை விளைவிக்கின்றது.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

5. அதன்படி மறைப்பாடசாலை கிறிஸ்தவனுக்கு பொதுக் குருத்துவத்தின் மூலம் இறைவாக்குப் பணியில் ஈடுபட உதவியாகின்றது.

6. கத்தோலிக்க மறைப் பாடசாலையின் குறிக்கோள்களாவன:

- இயேசுக் கிறிஸ்துவினால் இவ்வுலகில் ஆரம்பிக்கப்பட்ட பணியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதன் மூலம் இவ்வுலகில் இறையரசைப் பரப்புதல்.
- கிறிஸ்து இயேசுவோடு ஓர் ஆழ்ந்த உறவை ஏற்படுத்திக் கொள்வது.
- அதன் மூலம் விழுமியங்கள் நிறைந்த கத்தோலிக்க சிறார்களைப் பயிற்றுவித்தல்.

கத்தோலிக்க மறைப்பாடசாலையின் பணிகளாவன.

- வாரந்தோறும் மறைப்பாடசாலைகளை நடாத்தி, மாணவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றச் செய்தல்.
- கத்தோலிக்க மறைப்பாடசாலைத் தினம் ஒன்றை நடாத்துதல்.
- திருவிவிலிய அறிவுப் போட்டியை நடாத்துதல்.
- ஒவ்வொரு வருட இறுதியிலும் மறைப்பாடசாலைப் பரீட்சையை நடாத்துதல்.
- சுயவிருப்புடன் முன்வந்து சிறார்களுக்கு மறைக்கல்வி வழங்குதல்.
- மறையாசிரியர்களின் அறிவைக் காலத்திற்கு ஏற்றவாறு வளர்த்தல்.
- தேசிய மறையாசிரியர் பரீட்சைக்காக மறையாசிரியர்களை ஆயத்தம் செய்தல்.

(1 x 5= 05 புள்ளிகள் )

(இவற்றுள் ஐந்து கருத்துக்கள் இருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/